முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**முக்காலமும் உணர்ந்த முனிவனும் பொருளாதார மேதையுமான முருகப்பெருமான் அருளியது எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி பங்குனி மாதம் 24ம் திகதி முதல் விகாரி சித்திரை மாதம் 1ம் திகதி வரை ஏப்ரல் 7ம் திகதி முதல் ஏப்ரல் 14ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **தன்னார்வ தொண்டுமிக்க பாரதமே**
**தயவு நெறிதனை கொண்ட தமிழகமே**
**மண்ணாள மக்கள் சக்தி துணை**
**மகத்துவம் மிகுந்த தமிழகம் பாரதமே**

**2.** **பாரதம் தமிழகம் தன்னில் இனிதே**
**பகருவேன் விளம்பி சேல்திங்கள் அறுநான்கு திகதி மேல்**
**கூறவே விகாரி தகர் திங்கள் ஏகதிகதி வரை**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 24ம் நாள் 07.04.2019, ஞாயிறு முதல் விகாரி சித்திரை மாதம் 1ம் நாள் 14.04.2019, ஞாயிறு முடிய)**
**குறையிலா இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன்குறித்த**

**3.** **குறித்த ஆசிதனை சுப்பிரமணியர் யானும்**
**கூறுவேன் அரங்கமகான் கேட்க**
**தெரியவே மத்திய மாநிலமென**
**தேர்தல் குறித்த செயல்பாடுகளில்**

**4.** **செயல்பாடுகளில் கொள்கை மறைத்து**
**சேவை மறந்து கூட்டணி கொண்டால்**
**தயவான நிலை மறந்து கொள்ளை**
**தன் லாப நோக்கில் நடந்தால்**

**5.** **நடந்தாலே மக்கள் தீர்ப்பின் வழி**
**நட்டமே இவர்கள் காண நேரும்**
**தடைகளின்றி உண்மை நோக்கில்**
**தயவுபட மக்களை நோக்கி**

**6.** **நோக்கி இறங்கி வந்தால்தான்**
**நிலமதனில் பெரும்பான்மை கண்டு**
**தேக்கமிலா சேவை தொடரும்**
**தெய்வ துணைபட மாற்றம் காணும்**

**7.** **காணவே சாதி வழி நிலைப்பாடு**
**கலகம் நோக்கிலான செயல்பாடு**
**தானவர்களுக்கு பின்னடைவும்**
**தலைகுனிவும் தரக் கூடும்**

8. கூடாத மக்களை குழப்பும்
கொள்கை கொண்ட தலைகளும்
ஈடேறா முடைபட நேரும்
எங்கும் ஆதரவு பெறா சோடையுறும்

9. சோடையின்றி மத்திய மாநிலம்
சுப்பன் என் ஆற்றல்பட நிலை
தடையற உயர வளரவே
தயவு தருமவழி காட்டும் அரங்கன்

10. அரங்கன் உண்மை வழிக்கு வந்து
ஆதரவு தந்து ஆசி பெற்று
வரங்கள் ஏற்று நடக்க வல்லமை கூடும்
வழங்கிய வார ஆசி முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் பங்குனி மாதம் 24ம் நாள் 07.04.2019, ஞாயிறு முதல் விகாரி சித்திரை மாதம் 1ம் நாள் 14.04.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

தன்னார்வ தொண்டுகள் மிகுந்த பாரததேசமே தயவினை நெறியாகக் கொண்ட தமிழகமே மக்களாட்சியை உடைய மக்கள் சக்தியினால் ஆட்சி செய்யும் தமிழக பாரத தேசமே தமிழகத்திலும் பாரதத்திலும் பங்குனி மாதம் 24ம் நாள் 07.04.2019, ஞாயிறு முதல் சித்திரை மாதம் முதல் நாள் 14.04.2019, ஞாயிறு முடிய உள்ள காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் நடக்க இருக்கும் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் தங்களது கொள்கைகளை மறந்து தமது சேவை மனப்பான்மைகளை மறந்து மக்களிடம் உள்ள தயவினையும் மறந்து மக்களை கொள்ளை அடித்துஅடித்து லாபம் பெற வேண்டுமென்ற நோக்கம் மட்டுமே பிரதானமாக கொண்டு தனிப்பட்ட முறையிலோ கூட்டணியாகவோ செயல்பட்டால் மக்கள் தேர்தலில் தாங்கள் அளிக்கும் வாக்குகள் என்கிற தீர்ப்பின் மூலமாக தீர்ப்பளிப்பார்கள். அதனால் கொள்கை மறந்த கட்சிகள் எல்லாம் தோல்வியை சந்திக்க நேரும்.

அரசியல் கட்சிகள் தடையின்றி உண்மையுடன் நடந்து மக்களிடம் தயவு நோக்கில் நடந்து மக்களுக்காக சேவை செய்திட தொண்டுகளில் இறங்கி வந்தால்தான் தேர்தலின் முடிவுகளில் பெரும்பான்மை அடைந்து அவர்கள் தடையின்றி ஆட்சி செய்திட முடியும். தெய்வங்களின் துணையுடன் நாட்டினில் நல்ல மாற்றங்களும் உண்டாகும்.

அரசியல் கட்சிகள் பொதுநலத்துடன் சமநீதி சமநோக்கத்தினை கொள்கையாக கொள்ளாமல் சாதிகளின் அடிப்படையில் உண்டான கொள்கைகளையும் கலகத்தினை உண்டாக்கும், தீவிர எண்ணங்களை கொள்கைகளாகக் கொண்டு சாதிகளின் அடிப்படையில் மக்களுக்குள் கலகம் உண்டாக்கும்விதமாக நடந்து கொண்டால் அவர்களுக்கு இந்த தேர்தலில் தலைகுனிவு உண்டாகும், தோல்வியை சந்திக்க நேர்ந்திடும்.

**மக்களை குழப்பத்தில் ஆழ்த்தும் கொள்கைகளைக் கொண்ட தலைமைகளும், தாங்கள் தேர்தலில் வெற்றிபெற எண்ணிய எண்ணங்கள் ஈடேறாமல் தடைபட்டு போகும். எந்த மக்களின் ஆதரவும் இல்லாமல் வீண் போக நேரும்.**

**வீண் போகாமல் மத்திய மாநில அரசுகள் எல்லாம் முருகப்பெருமான் எமது ஆசிகளை ஆற்றலை நிலையாகப் பெற வேண்டுமாயின் தடையின்றி உயர்வடையவும், வளர்ந்திடவும் வேண்டுமாயின் தயவினால் ஆகிய தருமத்தின் வழிதனை காட்டி மக்களை வழிநடத்தும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தூய தர்மத்தின் வழிக்கு வந்து அரங்கரின் தருமம் போல தர்மங்கள் செய்து உலகில் தர்மத்திற்கு ஆதரவு தந்து அரங்கரிடத்து ஆசி பெற்று வரங்களை பெற்று அரங்கரின் தர்மகொள்கை உபதேசப்படி நடந்திட்டால் வல்லமைகள் பெருகி அற்புதமாய் வெற்றிகளை அடைந்து சிறப்பான வாழ்வை வாழலாம் என தமது வார ஆசி நூல் மூலம் கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.**

**—சுபம்—**